DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 239/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : பிச்சையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செந்தட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முப்பிடாதி என்பவரை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் முற்பகல் நான் எனது வீட்டில் இருந்தபோது சின்னகோவிலான்குளம் போலீசார் அங்கு வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அதை நான் படித்துப்பார்க்கவில்லை. **பார்வை மகஜர் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 08.02.2015 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த முப்பிடாதி என்பவரும் அ.சா.1ன் வீட்டின் அருகில் இருந்தபோது அங்கு வந்த சின்னகோவிலான்குளம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், முப்பிடாதி என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 239/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : தனபால் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சின்னகோவிலான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி செல்லத்துரை என்பவரை தெரியும். அவர் தற்போது உயிருடன் இல்லை. நான் காவல்நிலையத்தில் துப்புறவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் இருந்த எழுத்தர் என்னிடம் கேட்டதால் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது, ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை, என் முன்பாக யாரும் ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அத்தாட்சியில் **உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும்**

**அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலீசார் விசாரணையில் கடந்த 02.04.2015 ம் தேதி பகல் 2.30 மணிக்கு நானும், சாட்சி செல்லத்துரை என்பவரும் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் வைத்து எதிரி சம்பந்தப்பட்ட திருட்டு வழக்கான குற்ற எண்.80/2015 வழக்கு சம்பந்தாக எதிரியை விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முருகேசன் என்பவர் வீட்டில் திருட்டுக்குற்றம் புரிந்தது பற்றியும், குற்றம் செய்வதற்கு பயன்படுத்திய இரும்பு கம்பி TN புதுக்குடி பாம்புகோவில் சந்தை ரோட்டில் உள்ள தனது வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், கூறினார் என்றும், 03.04.2015 ம் தேதி 11 மணிக்கு காவல் ஆய்வாளர் என்னையும், சாட்சி செல்லத்துரை என்பவரையும் அழைத்து சென்று எதிரி அடையாளம் காட்டி ஆஜர்படுத்திய கம்பி ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எந்த வருடம், எந்த மாதம் எந்த தேதியில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் தெரியாது. நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் துப்புரவு பணியாளராக வேலை செய்தேன் என்றால் சரிதான். நிகழ்நிலை புகார்தாரர் முருகேசன் எனது ஊர்க்காரர் என்றால் சரிதான். நானும், நிகழ்நிலை புகார்தாரர் முருகேசனும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையதுதான். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையதுதான். அ.சா.1 ம்

நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் வேலை செய்த காவல்நிலையத்தில் உள்ள காவலர்கள் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் போட்டுக்கொடுத்துவிட்டு தற்போது இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**